**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.54/16**

2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.சாந்தி, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு. எஸ்.விஜி, உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திருமதி.சாந்தி, |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - க/பெ.திருஞானம் |
| கிராமம் | - வயலூர் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

24.11.2023
**பி.வா.சா.2.**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

எனது மாமனார் குப்பனின் தாய், தந்தையர் இருவரும் காலமாகிவிட்டார்கள். எனது மாமனார் குப்பனின் முதல் மனைவி செல்வி இறந்து 6 மாதம் கழித்து 1ம் வாதி வசந்தாவை என் மாமனார் 2-வதாக திருமணம் செய்துகொண்டார். என் மாமனார் காலமான பிறகு வாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் என்னுடைய கணவர் திருஞானம் ஆகியோர்கள் கூட்டாக சொத்தை அனுபவித்து வந்தார்கள். அதன் பிறகு என் கணவர் திருஞானம் சுமார் 4 வருடங்கள் கழித்து காலமாகவிட்டார். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டதற்கு முன்பாகவே என் கணவர் காலமாகிவிட்டார். என் கணவர் காலமான பிறகு வாதிகள், 1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் அனைவரும் தாவா சொத்தினை கூட்டாக அனுபவித்து வந்தோம்.

2) குப்பன் உயிருடன் இருந்த காலத்தில் வாதிகளுக்கோ அல்லது குப்பனின் இதர வாரிசுகளுக்குள்ளோ பாக பிரிவினை எதுவும் ஏற்படவில்லை என்று சொன்னால் குப்பன் உயிருடன் இருந்த காலத்தில் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பாதி பாதி சொத்தினை பாகம் கொடுத்தார். அதில் மூர்த்தி, திருஞானம், பெருமாள் மூவரும் எங்களுக்குள் சமமாக பாகம் பிரித்துக்கொண்டோம். பாகம் ஏற்பட்டதற்குண்டான ஆவணங்கள் எதுவும் இல்லை. தாவா சொத்து பூர்வீக கூட்டு குடும்ப சொத்து என்பதால் வாதிகளுக்கு பாதியும், பிரதிவாதிகளுக்கு பாதியும் கொடுக்க முடியாது என்றும் அனைவருக்கும் சரி சம பாகமாகத்தான் கொடுக்க வேண்டும் என்றும், நான் சொல்வதுபோல் பாகம் எதுவும் பிரிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தங்களுக்கு வந்த பாகத்தை விற்பனை செய்துவிட்டார்கள். நான் சொல்வதுபோல் வாதிகள் சொத்தை விற்பனை செய்ததற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுகுறித்து எனக்கு தெரியவில்லை.

3) 2 முதல் 4 வரையினலான வாதிகள் குழந்தைகளாக இருந்த கால கட்டத்தில் குப்பன் 1-ம் வாதி வசந்தாவை கிளார் கிராமத்திற்கு அழைத்துச்சென்றுவிட்டார். எந்தெந்த சொத்துக்கள் வாதிகளுக்கும், எந்தெந்த சொத்துக்கள் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது என் கணவரும் மாமனாரும்தான் சொத்தை பாகம் பிரித்துக்கொண்டுத்தார்கள். நான் சொல்வதுபோல் உண்மையில் பாக பிரிவினை பாக பிரிவினை ஏற்படவில்லை என்றும், பாக பிரிவினை ஏற்பட்டிருந்தால் என் கணவருக்கு வந்த பாக சொத்தையாவது குறிப்பிட்டு சொல்லியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு தாவா சொத்தில் பாதி கிடைத்து அவர்கள் விற்பனை செய்துவிட்டார்கள் என்று நான் சொல்வது பொய் என்றும் அவ்வாறு விற்பனை செய்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

4) வாதிகள் தாவா சொத்துக்களை விற்பனை செய்யவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் பாகத்தை மறைத்து 1 முதல் 4 வரையான பிரதிவாதிகள் மற்றும் 8ம் பிரதிவாதி ஏற்படுத்தி கொடுத்துள்ள ஆவணங்கள் வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. 2015ம் வருடம் வாதிகள் சொத்தை பிரித்துக்கொடுக்க எங்களிடம் கேட்டார்கள் என்று சொன்னால் இல்லை. நான் கேட்கவில்லை என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், தாவா சொத்தை பாகத்தை பிரித்துக்கொடுக்க சொல்லி வாதிகள் கேட்டும் நாங்கள் பிரித்துக்கொடுக்காததால்தான் வாதிகள் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. 11.11.2015 அன்று வாதிகள் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார்கள். அதன் பிறகும் நாங்கள் வாதிகளுக்குண்டான பாகத்தை பிரித்துக்கொடுக்கவில்லை என்றும், அதனால்தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

5) வாதிகள் சொத்தினை விற்பனை செய்து கிளார் கிராமத்தில் சொத்துகள் மற்றும் அறுவடை இயந்திரம் வாங்கியுள்ளார்கள் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதற்கு அனுசரணையாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அய்யாகண்ணு உயிருடன் இருந்த காலத்தில் சில சொத்துக்களை விற்பனை செய்து 1ம் வாதிக்கு ரொக்கமாக பணம் கொடுத்தார் என்பதற்கு ஆதார ஆவணங்களை எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 சான்றாவணம் குறித்து எனக்கு தெரியாது. என் கணவருக்குதான் தெரியும். அதேபோல் என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.6 வரையான சான்றாவணங்கள் குறித்தும் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3ல் மூர்த்தி, பெருமாள், என் கணவர் திருஞானம் ஆகிய வாரிசுகள் கையொப்பம் இட்டுதான் தாவா பி-அட்டவணையில் உள்ள 20 மற்றும் 21 அயிட்ட சொத்தினை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. என் மாமனார் காலமாகி 20 வருடங்கள் இருக்குமா என்றால் எனக்கு தெரியவில்லை.

6) என் மாமனார் காலமான பிறகுதான் பி.வா.சா.ஆ.3ன்படி சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டது. நான் சொல்வதுபோல் குப்பன் உயிருடன் இருந்த காலத்தில் பாக பிரிவினை ஏற்பட்டிருந்தால் குப்பனின் வாரிசுகள் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்திருக்க மாட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 சான்றாவணத்தின்படி குப்பனின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்துதான் பி-அட்டவணை 1 முதல் 6 வரையான சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதே சொத்துக்கள் குறித்து 2 வில்லங்க பதிவுகள் காணப்படுவதால் அது செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. தாவா எ-அட்டவனை 19வது அயிட்ட சொத்து குறித்த வில்லங்க சான்றிதழில் காணப்படும் விற்பனையானது அய்யாகண்ணு அவருடன் குப்பன், 8ம் பிரதிவாதி ஆகியோர்கள் சேர்ந்துதான் சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

7) எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி வாதிகள் தாவா சொத்தை விற்பனை செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், பாகம் ஏற்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், எனவே நான் சொல்வதுபோல் பாக பிரிவினை நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் குடும்ப சொத்து என்பதால் வாதிகள் பாகத்தை நாங்கள் மறுக்க முடியாது என்றும், வாதிகள் பாகம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா எ மற்றும் சி அட்டவணை சொத்துக்களில் இருந்தும் தாவா பி அட்டவணையில் உள்ள 9 முதல் 23 அயிட்டம்வரையான சொத்துக்களில் வாதிகளுக்க 1/8 பாக உரிமை உள்ளது என்றும், அதை 1 முதல் 6 வரையான பிரதிவாதிகள் பிரித்து கொடுக்க கடமைபட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா பி அட்டவணை 1 முதல் 6 வரையான அயிட்ட சொத்துக்களை 12 மற்றும் 13 பிரதிவாதிகள் வாதிக்குண்டான பாகத்தை பிரித்துக்கொடுக்க கடமைபட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

8) தாவா 8-வது அயிட்ட சொத்தில் 1 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் வாதிகளுக்கு பிரித்துக்கொடுக்க கடமைபட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் விலை உயர்ந்துவிட்டது நாங்கள் ஏற்கனவே விற்பனை செய்துவிட்டோம். தாவா சொத்துக்களில் விலை ஏறிவிட்டதால் வாதியின் பாகத்தை ஏமாற்றம் நோக்கோடு நாங்கள் செயல்பட்டு வாதியின் பாகத்தை பிரித்துக்கொடுக்காமல் காலம் கடத்தி வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ஏற்கனவே பாகம் பிரித்துக்கொண்டு வாதிகள் விற்பனை செய்துவிட்டார்கள். நான் தாவா சொத்தை வாதிகள் விற்பனை செய்துவிட்டார்கள் என்று சொல்வது பொய் என்றும் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், எனவே தாவாபடி தீர்ப்பாக வேண்டம் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு வந்த பாகத்தில் 10 செண்ட் பாகத்தைதான் வைத்துள்ளோம். இதர சொத்துக்களை விற்பனை செய்துவிட்டோம். நாங்கள் விற்பனை செய்தற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. விற்பனை செய்துவிட்டோம் சொத்து இல்லையென்று வீண் வியாஜியம் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

**11 மற்றும் 12ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக உணவு இடைவேளைக்கு வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.**

**சாட்சி சத்திய பிரமாணத்தின்பேரில் 11 மற்றும் 12ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

என் மாமனாரின் பெயர் குப்பன். அவருக்கு முதல்தாரம் இறந்துவிட்ட பிறகு 2வதாக திருமணம் செய்துக்கொண்டார். என் கணவர் முதல்தாரத்து மகன். 8ம் பிரதிவாதியான ஜோதி என்கின்ற சின்னபையன் என் மாமனாருடன் பிறந்தவர். ஜோதியும் என் மாமனார் குப்பனும் அவர்களது தகப்பனார் சொத்தில் பாகம் பிரித்துக்கொண்டார்கள். என் மாமனார் குப்பனுக்கு

பாகமாக வந்த சொத்தை அவர் உயிரோடு இருந்த காலத்தில விற்பனை செய்துவிட்டார். சில சொத்துக்களை தன் தம்பி சின்னபையனுக்கே விற்பனை செய்துவிட்டார். சின்னபையனும் கிரையம் பெற்ற சொத்துக்களில் சில சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார். சில சொத்துக்களை தன் மகனுக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார். என் மாமனார் குப்பனுக்கு பாகமாக வந்த சொத்துக்கள் அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே அனைத்தும் விற்பனை செய்துவிட்டார்.